தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி, 31900 கம்பார், பேராக்.

தமிழ்மொழி (ஆண்டு :3)



# நான் ஒரு குடை

வெயிலிலிருந்தும் மழையிலிருந்தும் அனைவரையும் நான் ____________________. நான் தான் குடை. என் பெயர் 'டவர்'. என் நிறம் ஊதா. நான் இரும்பாலும் ____________________ செய்யப்பட்டேன்.

நான் கிள்ளானிலுள்ள ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். என்னையும் நண்பர்களையும் ஒரு நெகிழிப் பையில் வைத்தனர். எங்களை ஒரு பெரிய பெட்டியில் வைத்து ________________ ஏற்றினர். சில மணி நேரப் பயணத்திற்குப் பிறகு, நாங்கள் ஈப்போ எனும் பட்டணத்தை அடைந்தோம். சற்று நிமிர்ந்து பார்த்தேன். 'பாலா சிற்றங்காடி' எனப் பெயர்ப் பலகை இருந்தது.

அக்கடையின் முதலாளி திரு. பாலா எங்கள் மேல் _________________ ஒட்டினார். என் விலை RM18.00. அச்சிற்றங்காடியில் எங்களை வரிசையாகத் ___________________. என் நண்பர்கள் ஒவ்வொருவராக என்னை விட்டுப் பிரிந்தனர். எனக்கான நாளை எதிர்ப்பார்த்துக் _______________ கொண்டிருந்தேன்.

ஒருநாள் கனத்த __________ பெய்தது. ஒருவர் அவசர அவசரமாகச் சிற்றங்காடிக்குள் நுழைந்தார். ____________ எதுவும் பேசாமல் உடனே என்னை வாங்கினார். கடையை விட்டு வெளியே சென்றார். என் காலடியில் ஒரு ________________ அழுத்தினார். அவரை மழையில் இருந்து பாதுகாக்க நான் அழகாய் ______________

இன்றுவரை என்____________ தவறாமல் அவரை மழையிலிருந்தும் வெயிலிலிருந்தும் பாதுகாத்து வருகிறேன். என் உயிர் உள்ளவரை அவருக்குக் கடமையாற்ற _____________கொண்டுள்ளேன்

| | | | |
|---|---|---|---|
| கடமை | கனவுந்தில் | விசையை | தொங்கவிட்டனர் |
| விலையட்டையை | மழை | விரிந்தேன் | பேரம் |
| நெகிழியாலும் | காத்துக் | பாதுகாப்பேன் | உறுதி |

LIVEWORKSHEETS